1974 சனவரி 22]

திருவண்ணுமலையில் வனஸ்பதி தொழிற்சாலை

* 86 வினு—திரு. ந. நாச்சியப்பன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருவண்ணுமலையில் கூட்டுறவுத் துறையின் கீழ் ஒரு வனஸ்பதி தொழிற்சாலை அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) & (இ) இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்திலே அதிகமாக மணிலா விளைகிறது. அது மட்டு மல்ல, அதற்குப் பக்கத்திலே தென் ஆர்க்காடு மாவட்டம் இருக்கிறது. அங்கேயுள்ள திருவண்ணுமலையிலே மணிலா அதிக மாக இருக்கிறது. இந்த நிலையிலே கையிலே இருக்கின்ற வெண்ணெயைக் கொடுத்துவிட்டு, பம்பாயிலிருந்து நெய்யை வாங்குவதைப்போல் இல்லாமல் இங்கேயே ஒரு வனஸ்பதி தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு நம்முடைய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, அப்படி எண்ணெய் உற்பத்தி செய்வதற்காக 60 இலட்சம் ரூபாய் செலவிலே ஒரு திட்டத்தை ஏற்படுத்த அதற்கான இடத்தையும் திருவண்ணுமலையிலே பார்த்து ஏற்பாடு செய்திருக்கிறோம். அதை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் அப்ரூவலுக்காக அனுப்பியிருக்கிறோம். அவர்கள் தான் அப்ரூவ் செய்ய வேண்டும், அவர்களுடைய அப்ரூவல் வந்ததற்குப் பிறகுதான் அது தொடங்கப்பட வேண்டும். முதல் கட்டமாக கடலையிலிருந்து எண்ணெய் எடுக்கின்ற தொழிற் சாலையை வைத்துவிடலாம் என்ற அடிப்படையிலேதான் வனஸ்பதி தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு முன்னதாக இந்தத் திட்டத்தைக் கொண்டு வருகிறோம்.

[1974 சனவரி 22

ஏற்கனவே நம்முடைய மாநிலத்திலே ஐந்து தனியார்கள் வனஸ்பதி தயாரிக்கும் தொழிற்சாலைகள் இருக்கின்றன, அவற்றிலிருந்து 20 ஆயிரம் டன்கள் வனஸ்பதி உற்பத்தியாகிறது. நம்முடைய மாநிலத்திற்கு அதிகமான வனஸ்பதி தேவையில்லை—காரணம் நம்முடைய மாநிலத்திலேயுள்ளவர்கள் கொழுப்பு சத்து அதிகமாகவுள்ள வனஸ்பதியை அதிகமாக ஒத்துக்கொள்வதில்லை என்ற காரணத்தினால் 12 ஆயிரம் டன் நமக்குச் செலவாகிறது. இதிலேயே மீதம் உள்ள 8 ஆயிரம் டன்னை வெளி மாநிலங்களுக்கு அனுப்புகிறோம். இந்தத் தொழில் கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிக்கப்படுகிற காரணத்தினாலே ஏற்கனவே உள்ள தனியார் துறையோடு போட்டிபோட்டு செம்மையாக நடத்தமுடியுமா, லாபகரமாக நடத்தமுடியுமா என்பதை யோசித்துத்தான் வனஸ்பதி தொழிற்சாலையை ஆரம்பிக்காமல் முதல் கட்டமாக திருவண்ணாமலையிலே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே எண்ணெய் ஆலை ஒன்று ஆரம்பிக்கத் திட்டம் போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மோட்டார் வாகனங்களின் முகப்பு விளக்குகள்

*87 வினா.—**திரு. என். கிட்டப்பா**: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பஸ், லாரி, கார்களில் கண்களைக் கூசும் வகையில் புதிய ரக பல்புகளை உபயோகப்படுத்தி வருவதைத் தடை செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மோட்டார் வாகனங்களின் முகப்பு விளக்குகள் வெள்ளை நிறத்தில்தான் இருக்க வேண்டும் என்று, 1940-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதி, 296-ல் ஏற்கனவே வழி செய்யப்பட்டு இருக்கின்றது. முகப்பு விளக்குகளில் வெள்ளை நிறமல்லாத எந்த பல்புகளை உபயோகித்தாலும் மேற்சொன்ன விதியின்படி குற்றமாகும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மேற்கண்ட விதிகளை மீறியதற்காக நடப்பு ஆண்டிலே எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள்? அல்லது அபராதம் விதிக்கப்பட்டார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?